வரவேற்பு...

ஹமாஸ்–இஸ்ரேல் போரைத் தொடர்ந்து, இஸ்ரேலிலிருந்து 'ஆபரேஷன் அஜய்' திட்டத்தின் மூலம் மீட்கப்பட்டு தில்லி விமான நிலையத்துக்கு செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வந்தடைந்த பயணிகளை வரவேற்ற மத்திய இணையமைச்சர் எல்.முருகன். இந்த விமானத்தில் 18 நேபாள நாட்டவர் உள்பட 286 பயணிகள் வந்தனர்.

ஹமாஸிடமிருந்து வயது முதிர்ந்த தம்பதியை காப்பாற்றிய 'வல்லமைமிக்க இந்திய பெண்கள்'

இரு மலையாளிகளுக்கு இஸ்ரேல் பாராட்டு

திருவனந்தபுரம், அக்.18: வயது முதிர்ந்த தம்பதியை ஹமாஸ் படையினரிடம் இருந்து காப்பாற்றிய கேரளப் பெண்கள் இருவரை 'வல்லமைமிக்க இந்திய பெண்கள்' என்று இஸ்ரேல் பாராட்டியுள்ளது.

கடந்த அக்டோபர் 7–ஆம் தேதி இஸ்ரேல் மீது பாலஸ்தீனத்தின் காஸா முனை பகுதியில் இருந்து ஹமாஸ் படையினர் ராக்கெட்டுகளை வீசியும், எல்லை தாண்டியும் திடீர் தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல், ஹமாஸ் படையினர் இடையே தீவிர மோதல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், காஸா முனை எல்லையையொட்டி இஸ்ரேலின் நிர் ஆஸ் என்ற பகுதியில், வயதான தம்பதியின் பராமரிப்பாளர்களாக கேரளத்தைச் சேர்ந்த சபிதா, மீரா மோகனன் ஆகிய 2 பெண்கள் பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக, அவர்கள் பராமரித்து வரும் மூதாட்டி நரம்பு மண்டல நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் வசிக்கும் வீட்டுக்குள் அக்டோபர் 7–ஆம் தேதி ஹமாஸ் படையினர் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். அப்போது என்ன நடந்தது என்பதை காணொலி ஒன்றில் சபிதா விவரித்துள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது:

அக்டோபர் 7–ஆம் தேதி காலை எச்சரிக்கை விடுக்கும் சைரன் ஒலி கேட்டதும் வயதான தம்பதியுடன் பாதுகாப்பு அறையில் தஞ்சமடைந்தோம். இதைத் தொடர்ந்து, தம்பதியின் மகளிடம் இருந்து கைப்பேசியில் அழைப்பு வந்தது. வீட்டுக் கதவுகளை தாழிட்டு உள்ளே இருக்குமாறு அவர் கூறினார்.

நான்கரை மணி நேரப் போராட்டம்: சில நிமிஷங்களில் வீட்டுக் கதவுகளை ஹமாஸ் படையினர் உடைத்து ஜன்னல் கண்ணாடிகளை துப்பாக்கியால் சுடும் ஓசை கேட்டது. நாங்கள் மீண்டும் தம்பதியின் மகளை அழைத்து என்ன செய்வது என்று கேட்டோம். அதற்கு அவர் வெளியில் இருந்து திறக்க முடியாதபடி, பாதுகாப்பு அறையின் கதவுப் பிடியை இறுக்கமாகப் பிடித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அவர் கூறியபடி நாங்கள் செய்தோம். ஆனால், அறையின் கதவை ஹமாஸ் படையினர் தாக்கினர். அதன் மீது துப்பாக்கியால் சுட்டு கதவைத் திறக்குமாறு வலியுறுத்தினர். வெளியே என்ன நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

சுமார் நான்கரை மணி நேரத்துக்கும் மேலாக கதவைத் திறக்கமுடியாதபடி, அதை நானும் மீராவும் இறுக்கமாகப் பிடித்திருந்தோம். பிற்பகல் ஒரு மணியளவில் இஸ்ரேல் பாதுகாப்புப் படை வந்து துப்பாக்கிச்சூடு நடத்தி எங்களைக் காப்பாற்றியது.

நாங்கள் அறையில் இருந்து வெளியே வந்தபோது, வீட்டில் இருந்த பொருள்களை ஹமாஸ் படையினர் முற்றிலும் சேதப்படுத்தியும், கொள்ளையடித்தும் சென்றது தெரியவந்தது. மீராவின் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்), முக்கிய ஆவணங்கள் இருந்த எனது பை ஆகியவற்றையும் அவர்கள் திருடிச் சென்றனர் என்று தெரிவித்தார்.

வயதான தம்பதியுடன் அவர்கள் தஞ்சமடைந்த பாதுகாப்பு அறை வலுவான இரும்புக் கதவை கொண்டிருந்ததால், அதன் மீது துப்பாக்கியால் சுட்டபோதிலும் அவர்கள் உயிர் பிழைக்க முடிந்தது.

சபிதாவின் காணொலியை இந்தியாவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் 'எக்ஸ்' தளத்தில் பகிர்ந்து, துணிவுடன் செயல்பட்ட அவரையும், மீராவையும் 'வல்லமைமிக்க இந்திய பெண்கள்' என்று பாராட்டியுள்ளது.

தொலைக்காட்சி செய்தியாளர் கொலையில் 4 பேர் குற்றவாளிகள்

15 ஆண்டுகளுக்குப் பின் தீர்ப்பு

நமது நிருபர்

புது தில்லி, அக். 18: தில்லியில் 15 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த தொலைக்காட்சி செய்தியாளர் சௌமியா விஸ்வநாதன் கொலை வழக்கில் நான்கு பேர் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பணிக்குச் சென்றுவிட்டு காரில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது சௌமியா விஸ்வநாதன் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பான வழக்கில் ரவி கபூர், அமித் சுக்லா, பல்ஜீத் மாலிக், அஜய் குமார் ஆகியோர் குற்றவாளிகள் என கூடுதல் அமர்வு நீதிபதி ரவீந்திர குமார் பாண்டே புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

ஐந்தாவது குற்றம்சாட்டப்பட்ட நபரான அஜய் சேத்தி, திருடப்பட்ட பொருளை வாங்கியதற்காக குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

இது தொடர்பாக நீதிபதி கூறுகையில், 'குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளது. தண்டனை விவரங்களை அறிவிக்க அக்டோபர் 26–ஆம் தேதி வழக்கு பட்டியலிடப்பட்டுள்ளது' என்றார்.

வழக்கின் பின்னணி: 2008–ஆம் ஆண்டு செப்டம்பர் 30–ஆம் தேதி வேலை முடிந்து அதிகாலை 3:30 மணியளவில் சௌமியா விஸ்வநாதன் காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலையின் பின்னணியில் கொள்ளை நிகழ்ந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

இக்கொலையில் நீண்ட காலமாக துப்பு துலங்காத நிலையில், மற்றொரு வழக்கு தொடர்பாக ரவி கபூரும், அமித் சுக்லாவும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், அவர்களுக்கு சௌமியா விஸ்வநாதன் கொலையில் தொடர்பு இருப்பதை போலீஸார் கண்டறிந்தனர்.

பல்வேறு உயர்நீதிமன்ற நீதிபதிகளாக வழக்குரைஞர்கள் 13 பேர் நியமனம்

கொலீஜியம் பரிந்துரை

புது தில்லி, அக். 18: பல்வேறு உயர் நீதிமன்ற நீதிபதிகளாக 13 வழக்குரைஞர்களை நியமிப்பதற்கான பரிந்துரையை மத்திய அரசுக்கு கொலீஜியம் அனுப்பியுள்ளது.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையில் நீதிபதிகள் சஞ்சய் கிஷண் கௌல், சஞ்சீவ் கன்னா ஆகியோரைக் கொண்ட கொலீஜியம் குழு இந்த முடிவை மேற்கொண்டது.

அதன்படி, குவாஹாட்டி உயர் நீதிமன்ற நீதிபதி பதவிக்கு வழக்குரைஞர்கள் உன்னி கிருஷ்ணன் நாயர், கௌசிக் கோஸ்வாமி ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

உத்தரகண்ட் உயர்நீதிமன்றத்துக்கு சித்தார்த்தா ஷா, அலோக் மெஹ்ரா, பஞ்சாப்–ஹரியாணா உயர்நீதிமன்றத்துக்கு ஹர்மீத் சிங் கிரேவல், தீபிந்தர் சிங் நல்வா, சுமீத் கோயல், சுதீப்தி சர்மா, கீர்த்தி சிங், மத்திய பிரதேச உயர்நீதிமன்றத்துக்கு வினய் சராஃப், விவேக் ஜெயின், ஆஷிஷ் ஷ்ரோதி, அமித் சேத் ஆகிய வழக்குரைஞர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட வழக்குரைஞர்களின் தகுதி, மத்திய நீதித் துறையிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள், சம்பந்தப்பட்ட மாநில அதிகாரிகளின் கருத்துகள் ஆகியவற்றை ஆராய்ந்து, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக கொலீஜியம் தெரிவித்துள்ளது.

எல்லையில் பாகிஸ்தான் வீரர்கள் அத்துமீறி துப்பாக்கிச் சூடு

2 பிஎஸ்எஃப் வீரர்கள் காயம்

ஜம்மு, அக்.18: ஜம்முவை ஒட்டிய சர்வதேச எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் வீரர்கள் இந்திய நிலைகளை நோக்கி திடீரென துப்பாக்கியால் சுட்டனர். இதில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) வீரர்கள் இருவர் குண்டு பாய்ந்து காயமடைந்தனர்.

செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த இந்தச் சம்பவம் குறித்து எல்லைப் பாதுகாப்புப் படை தரப்பில் வெளியிட்டப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

ஜம்முவை ஒட்டிய சர்வதேச எல்லையில் அர்னியா செக்டாரில் பிஎஸ்எஃப் வீரர்கள் இருவர் அங்கிருந்த மின் உபகரணங்களைப் பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பாகிஸ்தான் வீரர்கள் அவர்கள் பகுதியில் இருந்தபடி தொலைதூரத்தில் இருந்து குறிவைத்து சுடப் பயன்படுத்தும் துப்பாக்கியால் இந்திய வீரர்களை நோக்கிச் சுட்டனர். அதில், அவர்கள் இருவர் மீதும் குண்டுகள் பாய்ந்தன.

இதையடுத்து, சக வீரர்கள் விரைந்து சென்று அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பாகிஸ்தான் தரப்பினர் அத்துமீறி நடத்திய இந்தத் தாக்குதல் குறித்து அந்த நாட்டிடம் இந்திய தரப்பு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 2021, பிப்ரவரியில் இந்தியாவும், பாகிஸ்தானும் அமைதி ஒப்பந்தம் மேற்கொண்டன. அதன்படி, இரு தரப்பும் ஜம்மு–காஷ்மீர் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு உள்ளிட்ட அனைத்து எல்லையிலும் அத்துமீறி தாக்குதல்களை நடத்தக் கூடாது. ஆனால், பாகிஸ்தான் தரப்பினர் அவ்வப்போது இதுபோன்ற அத்துமீறல்களை நிகழ்த்தி வருகின்றனர்.

பிரதமர்தான் அதானியைக் காப்பாற்றி வருகிறார்

புது தில்லி, அக். 18: அதானி குழுமம் மீது பங்குச் சந்தை மோசடி குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அதன் தலைவர் தொழிலதிபர் கௌதம் அதானியை பிரதமர் நரேந்திர மோடி காப்பாற்றி வருவதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி புதன்கிழமை குற்றஞ்சாட்டினார்.

பங்குச் சந்தையில் தனது பங்குகளை உயர்த்திக்காட்ட அதானி குழுமம் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக அமெரிக்க ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்திருந்தது. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணை நடத்த வேண்டும் என 'இந்தியா' கூட்டணியில் இடம்பெற்றுள்ள எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இதனிடையே 'இந்தியா' கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார், இந்த விவகாரத்தில் அதானிக்கு ஆதரவு தெரிவித்ததோடு, ஹிண்டன்பர்க் ஆய்வறிக்கையை விமர்சித்து கருத்து தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்த விசாரணைக் குழு அமைத்த உச்சநீதிமன்றத்தின் முடிவையும் அவர் வரவேற்றிருந்தார்.

கடந்த ஏப்ரல், ஜூன், செப்டம்பர் ஆகிய மாதங்களில் சரத்பவாரும் அதானியும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அதானி குழுமத்தின் மோசடி தொடர்பான விவகாரத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளிலிருந்து சரத்பவார் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், தில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், அதானி உடனான சந்திப்பு குறித்து சரத்பவாரிடம் கேள்வி எழுப்பப்பட்டதா என ராகுல் காந்தியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த ராகுல் காந்தி, 'இது குறித்து சரத்பவாரிடம் கேள்வியெழுப்பவில்லை. சரத்பவார் நாட்டின் பிரதமரல்லர். அதானியை அவர் காப்பற்றவில்லை. பிரதமர் நரேந்திர மோடிதான் அதானியைக் காப்பாற்றி வருகிறார்.

அதனால்தான் பிரதமர் மோடியிடம் இது குறித்து கேள்வியெழுப்பி வருகிறேன்' என்றார்.

திரிணமூல் எம்.பி. மஹுவா மீது லஞ்சப் புகார்

பாஜக எம்.பி. துபே சாட்சியமளிக்க மக்களவை நெறிமுறைகள் குழு அழைப்பு

புது தில்லி, அக். 18: நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப லஞ்சம் வாங்கியதாக திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. மஹுவா மொய்த்ரா மீது பாஜக எம்.பி. நிஷிகாந்த் துபே புகார் அளித்த நிலையில், அதுதொடர்பாக அக்டோபர் 26–ஆம் தேதி வாய்மொழியாக சாட்சியமளிக்க துபேவுக்கு மக்களவை நெறிமுறைகள் குழு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவுக்கு பாஜக எம்.பி. நிஷிகாந்த் துபே அனுப்பிய கடிதத்தில் தெரிவித்ததாவது:

அண்மையில் மக்களவையில் மஹுவா மொய்த்ரா எழுப்பிய 61 கேள்விகளில், அதானி குழுமத்துக்கு எதிராக 50 கேள்விகளை எழுப்பியுள்ளார். அவர் மக்களவையில் கேள்வி எழுப்ப தொழிலதிபர் ஒருவரிடம் லஞ்சம் பெற்றுள்ளார். அந்தத் தொழிலதிபரின் விருப்பத்தின்பேரில், அதானி குழுமத்தை மஹுவா குறிவைத்து வருகிறார்.

இதுகுறித்து வழக்குரைஞர் ஜெய் ஆனந்த்தேஹத்ராய்எனக்குகடிதம்அனுப்பினார். தொழிலதிபரிடம் மஹுவா லஞ்சம் வாங்கியதற்கான மறுக்க முடியாத ஆதாரத்தையும் ஜெய் ஆனந்த் என்னிடம் வழங்கியுள்ளார். இதுதொடர்பாக விசாரிக்க 'விசாரணைக் குழு' அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தப் புகாரை ஆராய மக்களவை நெறிமுறைகள் குழுவுக்கு அவைத் தலைவர் ஓம் பிர்லா பரிந்துரைத்தார்.

இதைத் தொடர்ந்து, அந்தப் புகார் தொடர்பாக துபே, ஜெய் ஆனந்திடம் விசாரிக்க மக்களவை நெறிமுறைகள் குழு முடிவு செய்துள்ளது. அந்தக் குழு முன்பாக அக்டோபர் 26–ஆம் தேதி நேரில் ஆஜராகி, வாய்மொழியாக சாட்சியளிக்குமாறு இருவரிடமும் மக்களவைச் செயலகம் மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மிஸோரம்: 21 வேட்பாளர்களை அறிவித்தது பாஜக

புது தில்லி, அக். 18: மிஸோரம் சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிடும் 21 வேட்பாளர்கள் புதன்கிழமை அறிவிக்கப்பட்டனர்.

40 தொகுதிகளைக் கொண்ட மிஸோரமில் நவம்பர் 7–ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் ஆளும் மிஸோ தேசிய முன்னணி – காங்கிரஸ் இடையே நேரடிப் போட்டி உள்ளது.

அந்த மாநிலத்தில் பாஜகவுக்கு அதிக செல்வாக்கு இல்லாத நிலையிலும், இத்தேர்தல் மூலம் மாநிலத்தில் தனது வளர்ச்சியை நிரூபிக்கும் நோக்கில் பாஜக களத்தில் இறங்கியுள்ளது. முதல் கட்டமாக 21 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

சத்தீஸ்கர்: சத்தீஸ்கரில் பண்டாரியா தொகுதி பாஜக வேட்பாளராக பவனா போரா அறிவிக்கப்பட்டார். 90 தொகுதிகளைக் கொண்ட சத்தீஸ்கரில் நவம்பர் 7, 17 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது. ஏற்கெனவே 85 தொகுதிகளுக்கு பாஜக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட நிலையில், இப்போது மேலும் ஒரு தொகுதிக்கு வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

பாஜக மத்திய தேர்தல் குழு வேட்பாளர்களைத் தேர்வு செய்து அறிவித்து வருகிறது. இக்குழுவில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷா, பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி. நட்டா உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

கனரா வங்கி Canara Bank
A Government of India Undertaking
Punjab Syndicate

காஞ்சிபுரம் மண்டல அலுவலகம்
எண்.2/13, ஸ்ரீ குரு மிசிரி காம்ப்ளக்ஸ்,
காமராஜர் தெரு, மேற்கு தாம்பரம்,
சென்னை-600045.போன்: 044-2226 1462

நகை ஏல அறிவிப்பு

எங்களது வங்கி கிளைகளில் கீழே குறிப்பிட்ட நபர்கள் தங்களது நகைகளை அடமானம் வைத்து நகைக் கடன் பெற்றுள்ளனர். நகைக்கடன் தவணைக்காலம் முடிந்தும் நகைக் கடன் மற்றும் வட்டி தொகையை திரும்ப செலுத்துமாறு பதிவு தபால் மூலம் தகவல் தெரிவித்தும் பதிவு தபால் பெற்றுக்கொண்டும் / தபால் பட்டுவாடா ஆகாத நிலையிலும் நகைகள் இன்று வரை மீட்கப்படாமல் உள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட நபர்கள் நிலுவை தொகையை செலுத்தி நகைகளை மீட்க தவறினால் அந்த நகைகள் கடன்தாரர் செலவில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் சம்பந்தப்பட்ட வங்கி கிளைகளில் வைத்து பகிரங்க ஏலம் விட்டு விற்பனை செய்யப்படும். ஏலமானது அதே நாளில் குறிப்பிட்ட நேரத்தில் முடிவுறா விட்டால் அதை அதற்கு அடுத்த நாட்களில் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் புதிய அறிவிப்பு ஏதுமின்றி தொடரப்படும். நகைகள் விற்று கிடைக்கும் தொகையை அவரவர் நகை கடன்களில் வரவு வைக்கப்படும். ஏலத்தொகை கடனுக்கு ஈடு செய்த பின் ஏதேனும் கடன் பாக்கி இருந்தால் அந்த தொகையை வசூல் செய்ய வங்கி சட்டப்படி நடவடிக்கை எடுத்து வசூலிக்கும். ஏலத்தில் பங்குபெற விரும்புவோர் தங்களது அசல் அடையாள அட்டையை வங்கி அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

வ. எ.	கடன் எண். / கடன் பெற்றவரின் பெயரும், முகவரியும்	கடன் பெற்ற தேதி	கடன் தொகை (ரூ.)	ஏல தேதி
1	செய்யூர் கிளை (01038) கணக்கு எண்.1038842021500/ திரு. குமாரசாமி.P, 36A, LN புரம் கிராமம், ஒணம்பாக்கம் அஞ்சல், மதுராந்தகம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம்,தமிழ்நாடு - 603301.	05-03-2013	4,21,242.98	08.11.2023
2	செய்யூர் கிளை (01038) கணக்கு எண். 180021565912/ திரு.கார்த்திக், த/பெ. சந்தரசேகர், 1/73, ஜஜார் தெரு, செய்யூர் அஞ்சல், செய்யூர் தாலுக்கா, காஞ்சிபுரம், தமிழ்நாடு - 603 302.	27-09-2021	1,43,267.00	08.11.2023
3	செய்யூர் கிளை (01038) கணக்கு எண். 1038842036332/ திரு. வக்கீலா பாபி.J, த/பெ. ஜெயபாலன், மேற்கு செய்யூர், செய்யூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 603 302.	23-04-2019	1,49,189.53	08.11.2023
4	செய்யூர் கிளை (01038) கணக்கு எண். 1038842021952/ திரு. முனியாண்டி.G, த/பெ. கணேசன், 1064, நடு தெரு, கடுக்கலூர், செய்யூர் தாலுக்கா, தமிழ்நாடு - 603 302.	30-04-2013	1,18,968.00	08.11.2023
5	செய்யூர் கிளை (01038) கணக்கு எண். 1038842041826/ திரு. செல்வராஜ்.P, 111/109, 1வது புதியம்மன் கோயில் தெரு, பனையூர் கிராமம் மற்றும் அஞ்சல், செய்யூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு-603302.	28-12-2020	89,764.00	08.11.2023
6	செய்யூர் கிளை (01038) கணக்கு எண். 1038842027986/ திரு. முருகவேல்.E, த/பெ. ஏழுமலை, சாலட் சாலை, செய்யூர், செய்யூர் அஞ்சல், செய்யூர் தாலுக்கா, தமிழ்நாடு - 603 302.	23-07-2015	97,188.00	08.11.2023
7	செய்யூர் கிளை (01038) கணக்கு எண். 1038842034004/ திரு. கன்னியப்பன்.C, த/பெ. செல்லப்பன், ஒத்தவாடை தெரு, செங்காட்டூர், செய்யூர் தாலுக்கா, தமிழ்நாடு - 603 302.	22-03-2018	65,577.00	08.11.2023
8	செய்யூர் கிளை (01038) கணக்கு எண். 1038842038746/ திரு. முருகன்.A, த/பெ. ஆறுமுகம், சுண்டிவிக்கம், மதுராந்தகம் தாலுக்கா, தமிழ்நாடு - 603 302.	28-01-2020	17,870.00	08.11.2023
9	சென்னை ஆதம்பாக்கம் கிளை (02628) கணக்கு எண். 2628836009252/ திரு. மிஹீர் பானு.S, 33, சாஸ்திரி நகர் 4வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு-600 088.	02-09-2020	55,158.00	30.10.2023

இடம் : சென்னை
நாள் : 19.10.2023
கனரா வங்கி,
மண்டல அலுவலகம், காஞ்சிபுரம்

யூனியன் பேங்க் Union Bank of India
சுங்குவாசத்திரம் கிளை
அன்னை காம்ப்ளக்ஸ், டிரங் சாலை, சுங்குவாசத்திரம், ஸ்ரீ பெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் பின்-602106.

[விதி - 8(1)] சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்திற்காக)

யூனியன் பேங்க் ஆப் இந்தியா, சுங்குவாசத்திரம் கிளை, அன்னை காம்ப்ளக்ஸ், டிரங் சாலை, சுங்குவாசத்திரம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் பின்-602106-ன் அதிகாரபூர்வ அதிகாரி கீழே கையொப்பமிட்டுள்ளவர், நிதி சொத்துக்கள் மற்றும் அமலாக்க பாதுகாப்பு வட்டி (இரண்டாவது) சட்டம் 2002 (சட்டம் எண்.54) மற்றும் பிரிவு 13(12)-ன் மற்றும் சட்டம் 2002, பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகளின் பிரிவு 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர் **(1) திரு. E. வெங்கடேசன், த/பெ. திரு. K. ஏழுமலை, (2) திரு. K. ஏழுமலை, த/பெ. லேட் திரு. கோதண்ட நாயக்கர்** ஆகியோருக்கு **21.03.2023** தேதியில் கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த **60 நாட்களுக்குள்** பாக்கித் தொகை **ரூ.5,31,061.58** (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பத்தி ஒராயிரத்து அறுபத்தி ஒன்று மற்றும் பைசா ஐம்பத்தி எட்டு மட்டும்) கடனுக்கான வட்டி சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

மேற்படி பாக்கித்தொகையை கடன்தாரர் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **12.10.2023** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது யூனியன் பேங்க் ஆப் இந்தியா-க்கு, கடன்தாரர் செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை **ரூ.5,31,061.58** மற்றும் வட்டி சேர்த்து செலுத்துவதற்கு உட்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13-ன் துணைப்பிரிவு (8)-ன் ஏரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்துகளின் விபரம்

நிலம் மற்றும் கட்டப்பட்ட கட்டிடம் உள்ளடக்கிய அளத்து பகுதியும், திருமங்களம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், ச.எண்.122 பகுதி மற்றும் 122/1 பகுதி (புதிய ச.எண்.382/பி, 382/9, 382/10 மற்றும் 382/11), அளவுகள் பரப்பு 2058 சதுர அடி மற்றும் நிலத்தின் எல்லைகள் வடக்கில் மூர்த்தி அவர்களின் மனை, தெற்கில் தெரு, கிழக்கில் செட்டில்ஸ் சொந்தமான 16 அடி பொது தனியார் பாதை, மேற்கில் செந்தாமரை அவர்களுக்கு சொந்தமான மனை.

தேதி : 12.10.2023
இடம் : சுங்குவாசத்திரம்
அதிகாரபூர்வ அதிகாரி
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் - III
5வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம்,
சாஸ்திரி பவன், ஹாரோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.

DRC எண்.108/2019 மின்-ஏல விற்பனை தேதி: 12.10.2023

O.A.எண். 151/2016 இன் குறிப்பிட்டுள்ள திரு. சுனில் குமார் மன்ராய் மற்றும் மற்றொருவரிடமிருந்து பேங்க் ஆஃப் பரோடா, பெருங்குடி கிளைக்கு செலுத்த வேண்டிய 11/03/2023 அன்றுள்ளபடி கடன் தொகையான ரூ.33,31,742/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து முப்பத்தொராயிரத்து எழுநூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) வசூலிக்கும் பொருட்டு, கீழே குறிப்பிட்ட சொத்துக்கள் இணையவழி வாயிலாக மின்-ஏல விற்பனை www.bankeauctions.com மூலம் விற்கப்பட உள்ளன.

சொத்தின் விவரங்கள்:

செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி, எண்.106 காலவாக்கம் கிராமம், இராஜீவ் காந்தி சாலை இல் அமைந்துள்ள சர்வே எண்கள். 192/1, 194/1, 194/2, 194/3, 195/1, 195/2, 195/3, 159/2B & 196 இல் அமைந்துள்ள 7ஏக்கர்கள் 11 செண்ட்கள் விஸ்தீரணத்தில் பிரிக்கப்படாத பங்கு 375ச.அடி நிலம் மற்றும் சுவிதாஞ்சலி, பிளாக் எண்.B, முதல் தளத்தில் உள்ள 2படுக்கையறைகளைக் கொண்ட 1176ச.அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட கட்டிடம் ஃப்ளாட் எண்.107, அதனைச் சார்ந்த அளைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: கிழக்கில்: சாலை; மேற்கில்: 159/2A; வடக்கில்:159/1, 158, 195/1, 196 & 195/2; தெற்கில்: 192/2, 193,163, 161 &160.

நிர்ணய விலை: ரூ.21,00,000/- (ரூபாய் இருபத்தொரு இலட்சம் மட்டும்)

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்	24.11.2023, காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை ஒவ்வொன்றிற்கும் தலா 3 நிமிட இடைவெளிகளுடன் விற்பனை முடியும் வரை தானாகவே காலம் நீடிக்கப்படும்.
டேவணித்தொகை	நிர்ணய விலையில் 10 %
டேவணித் தொகை வைப்பு மற்றும் ஏல படிவம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதி	22.11.2023 அன்றோ அல்லது அதற்கு முன்னதாக டேவணித் தொகையுடன் "The Recovery Officer, DRT-3, Chennai" என்கிற பெயரில் கணக்கு எண். 163302000000250, Indian Overseas Bank, Cathedral Branch, Chennai -2. IFSC Code: IOBA0000109 என்கிற கணக்கில் EFT/NEFT/RTGS பரிவர்த்தனை மூலம் வங்கியில் டெபாசிட் செய்து சமர்ப்பிக்க வேண்டும்
ஏல உயர்வு தொகை	குறைந்தபட்சம் ரூ.50,000/-
சொத்தை பார்வையிடுதல்	09.11.2023 காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை.

எந்த ஒரு ஆழ்நிலையிலும் விலைப்புள்ளி படிவம் தீர்ப்பாயத்தில் நேரடியாக தான் வடிவில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது மற்றும் அது தொடர்பான விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது

மேற்குறிப்பிட்டு